முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

சாட்சியின் சான்றுரை - PW-1

OS.No. 102/2017

பெயர்:திரு/திருமதி : ராமமூர்த்தி நாள். 03.12.2020

**1ம் பிரதிவாதி அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை**

நான் 12 ம் வகுப்பு வரை படித்து இருக்கிறேன். பொது சொத்து பாகபிரிவினைக்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது. வேலு கவுண்டர் சொத்திக்களில் பாகம் கேட்டு நான் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேலு கவுண்டருக்கு இரண்டு மனைவிகள். வேலு கவுண்டரின் பெயர் முதல் மனைவி வள்ளியம்மாள். அவருக்கு ரங்கநாதன் என்ற 1 மகனும் 3 மகள்களும் உள்ளனர். ரங்கநாதன் இறந்துவிட்டார். வள்ளியம்மாள் இறந்த பிறகு வேலு கவுண்டர் முனியம்மாளை திருமணம் செய்து கொண்டார். முனியம்மாளுக்கு 4 ஆண் குழந்தைகள் மற்றும் 1 பெண்குழந்தை உள்ளனர். பெண் குழந்தை இறந்து விட்டார். அவரின் வாரிசு இந்த வழக்கில் உள்ளனர். முனியம்மாளுக்கு பிறந்தவர்களில் என் அப்பா இரண்டாவது பிள்ளை. மூன்றாவது வெங்கடாசலம். நான்காவது பிள்ளை பரந்தாமன். வேலு கவுண்டரின் பெயரில் கிரயம் செய்யப்பட்ட ஆவணங்கள் 1 முதல் 7 வரை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த 7 பத்திரங்களில் கண்ட சொத்துகள் தோராயமாக 3½ ஏக்கர் உள்ளது. வேலு கவுண்டர் விவசாயம் செய்துள்ளாரா என்று எனக்கு செவி வழியாக தான் தெரியும். வாதிகள் 1 மற்றும் 2 விற்கு நேரடியாக தெரியும். வா.சா.11, 12, 13, 14, 15 ஆகிய பத்திரங்கள் அனைத்து செல்வராஜ் பெயரில் தனிப்பட்ட முறையில் வாங்கியது என்றால் கூட்டுக் குடும்பத்தில் அவர்

மூத்தவராக இருந்ததால் அவரின் பெயரில் வாங்கப்பட்டது. 1959 லிருந்து 1970 வரை அவரின் பெயரில் வாங்கப்பட்டது. அந்த சமயத்தில் நான் பிறக்கவில்லை. அது குறித்து 1 மற்றும் 2 வாதிகளுக்கு தெரியும். 1 முதல் 7 வாதிகள் வழக்கறிஞரிடம் தகவல் சொல்லி தாவா தாக்கல் செய்யப்பட்டது. வேலு கவுண்டர் 1955ல் இறந்து விட்டார். 1984ல் வாய்மொழியாக தாவா சொத்துகள் குறித்து பாகம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன். அதன் படி தாவா சொத்து குறித்து தனித்தனியா பட்டா சிட்டா அடங்கல் மாறியுள்ளது. தனித்தனியாக ஒவ்வொருவர் பாகத்திற்கு ஏற்ப மாறியுள்ளது. வாய்மொழியாக 4 பாகங்களாக பிரிக்கப்பட்டது. 8ம் வாதிக்கு 50 செண்ட் பிரித்து கொடுக்கப்பட்டது. மீதி பெண் வாரிசுகளுக்கு தாவா சொத்து பாகம் கொடுக்கப்படவில்லை. என் தகப்பனாரின் பாகம் குறித்து பட்டா சிட்டா அடங்கல் தாக்கல் செய்யப்படவில்லை. 1, 2 வாதிகளின் பெயரிலுள்ள பட்டா சிட்டா அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள சொத்துகள் அவர் வாங்கிய கடன் கொடுக்க முடியாமல் விற்றுவிட்டார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அந்த விபரம் குறித்து 1, 2 வாதிகளுக்கு தெரியும். 1ம் பிரதிவாதி கிரயம் விற்ற சொத்துகள் ஆவணங்கள் அ.சா.8, அ.சா.16, அ.சா.17, அ.சா.20, அ.சா.21, அ.சா.24. மேற்கூறிய ஆவணங்களில் விற்ற சொத்துகளை வாங்கிய நபர்கள் அவர் அவரின் பெயரில் அனுபவித்து வந்தார்கள் என்றால் பட்டா மாற்றி கொள்ளவில்லை. மேற்கூறிய ஆவணங்களுக்கு பட்டா சிட்டா ஆகியவைகளை நான் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு விற்ற விபரங்கள் அனைத்தும் 2017ல் தான் தெரியும். அதற்கு முன்பாக தெரியாது. நான் வில்லங்கம் சான்றிதழ் பார்த்த போது விற்ற விபரங்கள் தெரியவந்தது. அதற்கு முன்பாக எனக்கு தெரியாது. செல்வராஜ் விற்ற விபரங்கள் 2017ற்கு

முன்பே தெரியும் என்றும் வழக்கிற்காக 2017ல் தான் தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2, வாதிகளுக்கு மேற்படி சங்கதிகள் தெரியும். 1, 2 பிரதிவாதிகளுக்கு விற்ற விபரங்கள் அப்போதே தெரியும் என்றும் அதற்காக தான் அவர்கள் வழக்கிற்காக சாட்சியாக இல்லை என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை 09.12.2020 அன்று தொடர்ச்சி செய்யப்படுகிறது.